புதியப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

DUPLICATE

இந்துசாதனம்.

விரோதி௵ (1889) ஆவணிமீ ௨௭௳ ஆரம்பமானது.

THE HINDU ORGAN.

குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்."

பத்திரிகை கிரயம்.

(முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.)

யாழ்ப்பாணப்பட்டினம்: ௵ ௧-க்கு ரூ. ௨-௨௫.
வெளியூர், இந்தியா: ,, ரூ. ௩-௭௫.
தொலைவுப்பகுதி: ,, ரூ. ௩-௭௫.
தனிப்பிரதி சதம் -௦௫.

விளம்பர விகிதம்.

		ரூ. ச.
முதன்முறைக்கு:—	ஒருகலம்	௭-௫௦.
,,	அரைக்கலம்	௪-௦௦.
,,	கால்கலம்	௨-௫௦.
,,	ஒருஅங்குலம்	-௫௦.

அதிக தரமானதற்குக் குறைந்த விகிதங்களின் அனுசாரம்.

புத்தகம் - ௩௦. யாழ்ப்பாணம்—சித்தார்த்தி௵ ஆனிமீ ௧௨௳; ௧௯௧௯௵ ஜூன்மீ ௨௬௳. இலக்கம் - ௪௮

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருணையொடு ணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
கார்பூத்த மதிவிச்சை தொழிலென் ஞெரு
கம்பூத்த விகடவன்குல வணங்கிவாழ்க்காம்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

விளம்பரம்.

சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தகா, பீதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி பிஸ்தாஷ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீருள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அபரகபஸ்பம், வங்கபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு தருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, குலைவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவேந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை இறுத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௦. அரைறுத்தலுக்கு ரூபா ௧௦. கால் றுத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய தொடுவாய் இராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணி ஓடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார
வைத்தியசாலை,
இல. 96 முதல் மருதானை, கொழும்பு.

இதுவரை வெளிவராத புதுமாதிரியான

பவுண்டன் பேனுக்கள்.

பாக்கிங் செலவுமில்லை தபால்சார்சு மில்லை.

மைதொடாமல் எழுதக்கூடியது. எமது சுவிஸ்மேட் பேனாவை வாங்கிப்பார்த்தால் வேறெந்தப் பேனாவும் வாங்கப் பிரியமிராது. பேனா 1-க்கு விலை ரூபா 1. டஜன் ரூபா 11. பிளாக் பர்ட் பவுண்டன் பேனா 1-க்கு ரூபா 3—12. சுவான் பேனா 1-க்கு ரூபா 7—4. வர்பர் மேன்ஸ் ஐடியல் பேனா 1-க்கு ரூபா 7—12. வேறெந்தப் பேனாவும் எங்களிடம் கிடைக்கும். விலை விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

வி. பி. மணி அண்டு கோ,
10, வைத்தியநாதமுதலி தெரு,
செளகார்பேட்டை, மதராஸ்.

கவனியுங்கள்.

நயம் தினுசுகள்-சொற்பலாபம்-விலை சகாயம்.

பேர்பெற்ற செட்டிச்சாய நூல்கம்பெனி எது?

மதுரை

மு. சு. ராமசாமிஐயர் கம்பெனியே.

ஐயா!

எங்கள் பேரில் பட்சமும் விசுவாசமுமுள்ள கனவான்களே, நமது கம்பெனியில் சொந்தப் பாவனையில் கைதேர்ந்த வேலைகாரர்களால் அலிஜரைன என்ற பிமாசாயத்தில் உற்பத்தியாகிறநாட்டுச்சிகப்பு, செட்டிச்சாய நூல்களில் 10-ம் நம்பர் 16-ம் நம்பர் 20-ம் நம்பர் 22-ம் நம்பர் 24-ம் நம்பர் வரை. 1-ம் தரம் 2-ம் தரம் சாயங்களில் சுடர் அதாவது சுயவர்ணம் கால் கப்பு அரைகப்பு முழுகப்பு நிறங்களில் சாயந்தீர்ந்து 10 இழுத்தல் கட்டுகளும் டை கட்டு 18 அல்லது 24 கட்டுகள் கொண்ட பேல்களும் பாக்கிங் செய்யப்படும். 26-ம் நம்பர் முதல் 40-ம் நம்பர் வரை சிகப்பு நூல் வேண்டியவர்களுக்கு ஆடரின் பேரில் தயார் செய்து அனுப்பப்படும்.

சீமை பென்னிகறுப்பு மாதிரி செட்டி கறுப்பு சாயத்தில் 10-ம் நம்பர் முதல் 16×20×22××2430×40-ம் நம்பர்வரை சாயம் தயார் செய்து 5 முத்தல கட்டுகளும் டை கட்டு 20 அல்லது 30 கட்டுகள் கொண்ட பேல்களும் பாக்கிங் செய்யப்படும்.

டை நூல்களின் விலை சகாயமாயும் இழைப்புக்கு சிதரில்லாமலும் நயமான நூல்கள் தயாராயிருக்கின்றன. தேவையுள்ளவர்கள் 100-க்கு ரூபாய் 10—0—0 பத்து வீதம் அட்வான்சு அனுப்பி வி. பி. மூலமாய் ஆடர்செய்துகொள்ள வேண்டியது. டை பேல்களுக்கு பாக்கிங் செலவும் ரயில் சார்சும் பிரத்தியேகம். கம்பெனியாருக்கு பாத்தியமில்லை.

F. M. S. பெடரேரெட் மலாய நாடுகளில் இருப்பவர்கள் முன்பணம் அனுப்பி ஆடர்செய்ய வேண்டியது, சிங்கப்பூர் பினாங்கு என்ற இடங்களுக்கு வி. பி. போஸ்டு மூலமாய் அனுப்புவோம்.

நூல் விலை விபரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

எங்களுக்கு எழுதப்படும் ஒவ்வொரு லெட்டர்களிலும் தங்கள் விலாசம் தெளிவாகத் தெரியும்படி ஜில்லா தாலூகா போஸ்டு கிராமம் சமீப ரயில்வேஸ்டேஷன் கண்டெழுதியனுப்ப வேண்டியது. முக்கியமாய் தமிழில் லெட்டர்கள் எழுதியனுப்ப வேண்டியது.

இப்படிக்கு,
M. S. Ramaswamy Iyer,
Yarn Merchants,
Singara Topu Street,
Madura, S. INDIA.

விளம்பரம்.

கொழும்பு தமிழ் ஹோம்.

(1910-ம் ஆண்டு தொடக்கம் நடைபெறுவது.)

பிரயாணிகள் வேண்டிய வசதிகளுடன் தங்குமிடம்.

கப்பல் டிக்கட் எடுத்துக்கொடுக்கப்படும்.

95. Dam Street, Colombo



SRI RAMANA MAHARSHI.

தீனர்களைச் சுகிக்கும்பொருட்டுக் குருமூர்த்தமாகஎழுந்தருளி
திருஅண்ணாமலையில்பிரஹ்மாநந்தஸ்வரூபராய் வீற்றிருக்கும்
பிராஹ்மண பால்ய ஸந்யாஸி என்று வழங்கும
ஸ்ரீ. ரமண மஹர்ஷி.

ஜவுளி விளம்பரம்.

M. R. PERUMALIER,
MANUFACTURER OF SWADESI CLOTHS,
West Tower Street, Madura,
(S. INDIA.)

எமது தொழிற் சாலையில் தற்கால நாகரீகத்திற்கு ஏற்ற விதமாக அநேக நூதன தினுசுகள் 100, 150, 200-ம் நம்பர் நூலில் ஜரிகையிலும், சாதாவிலும், வேஷ்டிகள், சால்வைகள், சவுக்கங்களும், இன்னும் பலவித இங்கிலீஸ் கலர்களில், ஜரிகைச் சேலை, சாதா சேலை, தாவணி மதுரை சுங்கடி புடவை, சித்தாடை, ரவிக்கை வகையராக்கள், ஜரிகையிலும், சாதாவிலும் தயார் செய்துவைத்தும், காசி (பெனாரிஸ்), பம்பாய், பூனா, சூரத், கல்கத்தா, காஸ்மீர், காக்கிநாடு, காஞ்சிபுரம், கொர்நாடு, கும்பகோணம், கோயம்புத்தூர், பெங்களூர், சென்னபட்டணம், ஆரணி, சேலம், தஞ்சாவூர், திருச்சி, நெல்லூர், உப்பாடை, துயிலி, மலையாளம் முதலிய இடங்களில் தயாராகும் பட்டுச் சேலை, பனுக்காச சேலை வகையரா சகலதினுசுகளும் மொத்தத்தில் ஏராளமாய் வரவழைத்துவைத்து வியாபாரிகளுக்கும் மற்றும் சொந்தப் பாவிப்புக் காரர்களுக்கும் மொத்தமாகவும் சில்லறையிலும் சகாய விலைக்கு நேரில் கொடுத்தும் தபால் மூலமாய் வரும் கடிதங்களுக்கு போஸ்டு பார்சலாக சரக்கு அனுப்பிக்கொண்டு வருகிறோம்.

(1) திருப்தியில்லாத சரக்குகளை திருப்பப் பெற்றுக்கொண்டு வேறுவேரும் சரக்கை மாற்றிக் கொடுக்க முடியும்.

(2) சகல ஆடருக்கும் வி. பி. மூலமாக சரக்கு அனுப்பப்படும்.

(3) சிங்கப்பூர் பினாங்கு மலாக்கா முதலிய (S S) ஸ்ட்ரேயிட் செற்டில் மெண்டு நாடுகளுக்கும் வி. பி. யிலும் அனுப்பக்கூடும்.

(4) கோலாலம்பூர் சிலாங்கூர் முதலிய (F M S) பெடரேட்டெட் மலாய் நாடுகளுக்கும் தென்ஆபிரிக்கா மோரீஸ் முதலிய வெளிநாடுகளுக்கும் வி. பி. சட்டம் இல்லாததினால் போஸ்டல் ஆர்டர் மூலமாகவாவது மணியாடர் மூலமாகவாவது பணம் அனுப்பவேண்டும். பணம் வந்த பிறகு சரக்கு அனுப்பப்படும்.

(5) முற்பணம்அனுப்ப சவுகரியப்படாதவர்கள் சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய (S S)ஐச் சேர்ந்த போஸ்மாஸ்டர்களின்பேருக்கு பார்சல்களை அனுப்பும்படி எழுதினால் அனுப்புவோம். அவ்விடம் வந்து பணங்கட்டி பார்சல்களைப் பெற்றுக் கொள்ளலாம். இது மிகவும் சவுகரியமான ஏற்பாடு. அல்லது பாங்க் (Bank) மூலமாய் சரக்கு அனுப்பும்படி எழுதினாலும் அனுப்புவோம். உடனே பணத்தைக் கட்டி பார்சலைப் பெற்றுக் கொள்ளாத பக்ஷத்தில் சகலசெலவும் அவர்களைப் பொறுத்ததாகும்.

N. P. (a) ஜவுளி விலை விபரமடங்கிய காட்லாக் வேண்டுவோர் எமக்கு எழுதி இனமாக பெற்றுக்கொள்ளலாம்.

(b) எல்லா ஆடர்களும் எம்முடைய நேர்பார்வையின் பேரில் அனுப்புவோம்.

தங்கள் ஆர்டரை எதிர் பார்க்கும்

மு. ரா. பெருமாள் ஐயர்,
சுதேச ஜவுளி வியாபாரம்,
மேலக் கோபுரவீதி,
மதுரை. இந்தியா)

இனம்! வி. பி. சார்ஜ் இனம்!

பம்பாய் இமிடேஷன் பட்டுப் புடைவை.

பார்வைக்கு வெகு நேர்த்தியாயும் அழகாயும் நாணயமாயும்இருக்கும். இதில் பலவித கலர்களில் பலவித பூக்கள் போட்ட தரம் உண்டு. தற்காலத்துக்குத்தகுந்தசேலை. பிரபுக்களும் ஏழைகளும் உடுத்தக்கூடியது. ஓர் முறை வரவழைக்க உண்மை விளங்கும்.

8 கஜம் 7-8-0. 9 கஜம் 8½ ரூபா.

வி. சரஸ்வதிபாய் அண்டு கம்பெனி,
10, வைத்தியநாதமுதலி தெரு,
செளகார்பேட்டை, மதிராஸ்.

PLEASE TRY ONE OF OUR SARIS.

விலை ரூபா 4-0 0. விலை ரூபா -4-0-0.

மதுரை மீனுட்சி அம்மன் அழகிய புட்டாச் சேலை.

16 முளம் நீளம், 2¼ முழம் அகலம்; சாயம்நிற்கு உத்தரவாதம்; தற்காலத்துக்குத்தகுந்த நாணயமான நல்லசேலை. இதிற் பலவித புட்டாக்கள் போட்ட, பல தரங்கள் உண்டு. ஒருமுறை வரவழைக்க உண்மைபுலப்படும். ஒரேதடவையில் 4 சேலை வாங்குபவர்களுக்கு வி. பி. சார்ஜ் இனம். சாம்பிள் அனுப்ப முடியாது.

பம்பாய் இமிடேஷன் பட்டுப் புடவை ரூபா 8-4-0. 8 கெஜம், 9 கெஜம் ரூபா 9.

நாகபுரம் சரிகைச் சேலை ரூபா 7-8-0. கோசர்ஜான் பட்டுப் புடவை ரூபா 22 8-0. (சரக்கு 20 ரூபாவுக்கு மேற்பட்டால் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.)

சரஸ்வதிபாய் அண்டு கம்பெனி,
10, வைத்தியநாத முதலி தெரு,
சவுக்கார்பேட்டை,
மதராஸ்.

ஸ்ரீமந் நடராஜமூர்த்தி ஆனிஉத்திர மஹா சங்காபிஷேக தரிசனம்.

ஸ்ரீமந் நடராஜமூர்த்திக்குரிய ஆறு அபிடேக தினங்களுள் விசேடமுள்ளதாகிய இந்தமீ ௨௦உ வெள்ளிக்கிழமை (4-7-19) நிகழும்

ஆனித்திருவுத்திர புண்ணிய தினத்தன்று காவலூ
வண்ணை வைத்தியேஸ்வரசுவாமி கோயிலில் சிவகாமசுந்தரிசமேத
ஸ்ரீமந் சிதம்பரேஸ்வரப் பெருமானுக்கு
நவோத்தரசகஸ்ர மஹா சங்காபிஷேகமும்
தேவிக்கு நவோத்தரசத சங்காபிஷேகமும்,
உச்சிக்காலத்தில் புஷ்பவிமான ஆருடராய் உற்சவமும் பிரபலவர்த்தகர் கொக்குவில் ஸ்ரீ. அ. சதாசிவமவர்கள் உபயமாக விதிப்படி நடைபெறும்.

ஆதலினால் சைவசமயிகளனைவரும் மிக அரிதிற் கைகூடுவதாகிய இச் சிவகாட்சியைத் தவறவிடாது வந்து தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்வார்களாக.

அன்று பகல் கதிரேசன் கோவிலில் அன்னதானமும் நடைபெறும்.

சுவாமி அமிர்தானந்தா.

விசேஷ வியாபாரம்! சொந்த நெசவு!!

தந்தி விலாசம்:— முராஹரி, மதுரை.

விளம்பரம்.

M. R. Kasturi Aiyer Son of M. K. Ramier,

SWADESHI DHANALAKSHMI CLOTH STORE.

AMMAN SANNADHI STREET, MADURA. (SOUTH INDIA)

இதனால் சகலமான நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்வது:

எங்கள் முன்னோர்களால் நடத்திவந்த ஜவுளி வியாபாரத்தைச் சுமார் 12 வருஷகாலமாக எங்கள் பிதா "மு. க. ராமையா அண்டு சன்ஸ்" என்னும் விலாசம் வைத்து நாங்கள் அநேகம் நெசவு சாலைகள் ஏற்படுத்தி நூதனமாய் ஏராளமான தினுசுகள் உற்பத்தி செய்து உள்ளூரிலும் வெளியூரிலும் பிரதானமாயுள்ள ஜனப்பிறந்த சபைகளிலும் இருக்கும் வியாபாரிகளுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் பிரபுக்களுக்கும் மற்றையாவருக்கும் வியாபாரத்துக்காகவும் சொந்தப் பாவிப்புக்காகவும் விசேஷமாய் ஜவுளிகள் கொடுத்து பெரிய ஜவுளிவியாபாரஞ்செய்துகொண்டிருந்தோம்.

தற்சமயம் நாங்கள் டை மு. க. ராமய்யர் அண்டு சன்ஸ் மேல்கோபுரவாசல் தெருவிலும், கீழ்வெளி வீதியிலும் நடத்திக்கொண்டுவந்த மகசவு ஜவுளி வியாபாரத்தை நிறுத்தி வெகுகாலம் மேற்படி நெசவுசாலைகளில் கைதேர்ந்த நெசவுகாரர்களையும் இன்னும் அநேக புது நெசவுகாரர்களையும் சேர்த்து உள்ளூரிலும் இந்தியாவிலுள்ள அநேகர்களிலும் ஏராளமாய் புது நெசவு சாலைகள் ஏற்படுத்தி தற்கால நாகரீகத்துக்கு தகுந்த மாதிரியாயும் நாளுக்கு நாள் நூதனமான புது மாதிரி தினுசுகள் உற்பத்திசெய்தும் விலைகள் மிகவும் சகாயமும் விசேஷ லாபத்தைக் கருதாமல் சுதேச நன்மையை முன்னிட்டும் வியாபாரம் விருத்தி செய்துகொண்டு வருகிறோம்.

முக்கியமாய்நாங்கள் மேற்படி மு. க. ராமய்யர் அண்டு சன்ஸ் விலாசத்திலிருந்து சுமார் 7 வருஷகாலமாக முக்கிய பட்டணங்களையும் பிரதானமான ஜனப்பிரதேசங்களையும் அநேகம் தடவை நாங்கள் நேரில் போய் பார்வையிட்டு அவ்விடங்களிலிருக்கும் சுதேச சீமான்களும் சீமாட்டிகளும் பிரபுக்களும் உத்தியோகஸ்தர்களும் மற்றும் சாதாரணமா யுள்ளவர்களும் சாதாரணமாய் பாவிக்கக்கூடியதும் விசேஷகாலங்களில் பாவிக்கக்கூடிய மாதிரியான தினுசுகளும் ஒவ்வொருஊர்களிலும் அப்போதைக்கப்போது உண்டாகும் நாகரீகத்தையும் பார்வையிட்டு ஒவ்வொருவர்கள் மனதிற்கும் திருப்திகரமான தினுசுகள் அனுப்பிக்கொண்டும் வியாபாரிகளுக்கு ஒவ்வொரு மார்க்கங்களில் விசேஷமாய் விற்கக்கூடிய தினுசுகள் அனுப்பிக்கொண்டும் எல்லோருடைய மனத்திற்கும் சந்தோஷமாகும்படி விசேஷவியாபாரம் செய்துகொண்டுவந்த நாங்கள் தற்சமயம் மதுரை அம்மன் சந்நதித் தெருவில் ஜவுளிக்கடை யேற்படுத்தி ஏராளமான தினுசுகள் வைத்துக்கொண்டு ஒவ்வொருநாளும் அயலூர்களிலிருக்கும் வியாபாரிகளுக்கும் மற்றுமுள்ள யாவர்களுக்கும் தேவையான தினுசுகள் அந்த அந்த தேசங்களுக்கு பிடித்த மாதிரி ஜவுளிகள் ஏராளமாய் அனுப்பிக்கொண்டு வருகிறோம்.

ஆகையால் ஒவ்வொரு தேசங்களிலிருக்கும் சீமான்களும் சீமாட்டிகளும் பிரபுக்களும் உத்தியோகஸ்தர்களும் கிராமாதிகாரிகளும் மேஸ்திரி கண்டாக்டர்களும் அவரவர்களுக்கு சொந்தப் பாவிப்புக்கும் வேலையாட்களுக்கும் வேண்டிய மாதிரி ஜவுளிகளுக்கு எங்கள் கம்பெனிக்கு ஆர்டர் கொடுக்கவேணுமாய் நாங்கள் மிகவும் கேட்டுக்கொள்ளுகிறபடியால் தாங்கள் கட்டாய மெங்கள் கம்பெனிக்கு ஆர்டர் தந்து நாங்கள் அனுப்பும் சாமான்களை தங்கள் தங்கள் மனத்திற்கு சந்தோஷமாயிருப்பதைக்கண்டு ஒவ்வொருவரும் மேன்மேலும் எங்கள் வியாபாரத்தை விருத்தி செய்துகொண்டு வரவேண்டுமென்று மிகவும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

(முக்கிய கவனிப்பு) எங்கள் கம்பெனிக் கேட்லாக் வேண்டியவர்கள் விலாசம் தெரிவித்தால் இனாமாய்ப் பெற்றுக்கொள்ளலாம். சரக்குகள் தபால் பார்சலாகவும் ரயில் பார்சலாகவும் கப்பல் மார்க்கமாயும் வி. பி. யில் அனுப்பப்படும். வி. பி. இல்லாத ஊர்களுக்கு (பாங்க) மூலியமாய் அனுப்பப்படும். பாங்க் இல்லாத ஊர்களிலிருக்கிறவர்கள் பாங்க போஸ்ட் ஆர்டர் முற்பணம் அனுப்பவேண்டும், அல்லது சமீபத்தில் பாங்க் இருக்கும் ஊர்களின் பெயரும் பாங்கின் விலாசமும் தெரிவிக்க வேண்டும். ஒவ்வொருவரும் அனுப்பும் தபால் முதலியவைகளில் அவரவர்கள் முழுவிலாசத்தை தமிழ் அல்லது இங்கிலீஷில் தெளிவாய் எழுதி அனுப்பவேண்டும்.

சிங்கப்பூர் பினாங்கு மலாய்தொலாய்ப் பகுதிகளுக்கும் ஸிலோனுக்கும் இங்கிலீஸ் தமிழ் தெரிந்த ஏஜண்டுகள் தேவை.

Tele: Address:—
"MURAHARI" MADURA.

தங்கள் அன்புள்ள,
மு. ரா. கஸ்தூரி அய்யர்,
சொந்த நெசவு ஜவுளி வியாபாரி,
அம்மன் சந்நிதிதெரு, மதுரை தென் இந்தியா.

ஓடர் நயிசி.

அட்டனில் வைக்கப்படும் நுவரெலியா டிஸ்திறிக்கோர்ட்டில.

No. 60.

தலவாக்கலைத் தோட்டத்தில் குடியிருந்து மரணசாதனமின்றி மரித்துப்போன ரு. ம. பெருமாள் கங்காணியுடைய பூதலைப்பற்றிய காரியம்.

டிக்கோயா தலவாக்கலைத் தோட்டத்திலிருக்கும் மாரியாயம்மா விண்ணப்பகாரி.

1. பெரியசாமி
2. செல்லம்மா
3. சுப்பையா
4. முத்தானம்மா
5. ருமசாமி

என்பவர்களாகிய மேற்படி மைனர்களும் மேற்படி தோட்டத்திலிருக்கும் வஸ் தமையா கணக்கப்பிள்ளை என்பவராகிய அவர்களுடைய கார்டியனும் உத்தரவாதிகள்.

அட்டன்—நுவரெலியா டிஸ்திறிக்கோர்ட்டு நீதவானுகிய கனம் எச். ஏ. பேர்டன் துரையவர்கள் முன்பாக 1919-ம் ஆண்டு வைகாசி மாசம் 30-ந் தேதி இந்தக்காரியம் கொண்டுவரப்பட்டு விண்ணப்பக்காரியினுடைய பெருக்கோர்மாராகிய மெஸ்ஸர்ஸ் ஐயாத்துரையும் பாத்துலோமேசும் என்பவர்களுடைய முகதாவில் டை மாரியாயம்மாவுடைய 1919௵ வைகாசி௴ 22உ யிடப்பட்ட அத்தியப்பதமாம் வாசிக்கப்பட்டு பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது. அதாவது:—

1919-ம் ௵ ஆனி ௴ 13-ந் தேதிக்கு அல்லது அதற்கு முன் மேலேசொல்லப்பட்ட உத்தரவாதிகள் மேற்குறித்த காரணத்துக் கெதிரிடையான காரணம் இக்கோர்ட்டுக்குக் காட்டாவிடில் குறித்த விண்ணப்பக்காரியாகிய மாரியாயம்மா இறந்துபோனவருடைய மனைவியாயிருப்பதினால் அவருடைய பூதல் தத்துவம் அவளுக்கே உரித்தாகிவிடுமென்பதே.

கையொப்பமிடப்பட்டது:—எச். ஏ பேர்டன்,
டிஸ்திறிக் நீதவான்.

1919-ம் ௵ வைகாசி ௴ 30௳.

மேலே சொல்லப்பட்ட காரியத்தைப்பற்றிக் காரணங் காட்டும்படி 1919-ம் ௵ ஆனி ௴ 27-ந் தேதிக்குத் தவணைபோடப்பட்டிருக்கிறது.

எச். ஏ. பேர்டன்,
டிஸ்திறிக் நீதவான்.

யாழ்ப்பாணம்
சைவபரிபாலனசபைத்
தானவரவு.

நாயன்மார்கட்டு, சோதிடர் ஸ்ரீ. சம்பந்தபிள்ளையவர்களின் கனிஷ்ட சகோதரன் துரைச்சாமி என்பவரின் அபரக்கிரியையில் டைசபைக்கு வரித்தனுப்பிய ரூபா 1-00 பெற்றும்.

சித. மு. ப. சிதம்பரநாதச்செட்டி,
தனாதிகாரி.

பத்திரக்கிரய வரவு.

ஸ்ரீ.	ரூ. ச.
அ. திருஞானசம்பந்தக்குருக்கள், உடுப்பிட்டி	1-89
சந்தனம் கணக்கப்பிள்ளை, நாகன்வலை	5-00
மாடன் கங்காணி, நாகன்வலை	3-00
N. பொன்னுச்சாமிப்பத்தர் சவகச்சேரி	2 00

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:—சித்தார்த்தி ௵ ஆனி ௴ ௨௦௳.

சமாதானம்.

ஜர்மனியர் நேசராசாங்கத்தார் ஏற்படுத்திய சமாதான நிபந்தனைகளுக்குக் கைச்சாத்திடுவார்களோ வெனப் பலர் ஐயுற்றனர். ஆனால் இப்போது அவர்கள் கைச்சாத்திட உடன்பட்டுக்கொண்டார்களென்னுஞ் செய்தி வந்திருக்கின்றது. இச்செய்தி உலகமெங்கும் பெருஞ் சந்தோஷத்தை உண்டாக்கியிருக்குமென்பது சொல்லவேண்டியதில்லை. இச்செய்தி தேசாதிபதியவர்கள் அனுப்பிய தந்தி மூலமாக இங்கு வந்தபோது பலவிடங்களில் கொடிகள் ஆரோகணிக்கப்பட்டன. பல ஆலயங்களிலுள்ள மணிகள் ஒலித்தன. ஜர்மனியர் கைச்சாத்திடச் சம்மதித்தார்களென்னுஞ் செய்தி வந்ததன்றி, கைச்சாத்திட்ட செய்தி இன்னும் வரவில்லை. ஆயின் இஃதும் விரைவில் வந்துசேருமென்பதற்கு ஐயமின்று.

ஜர்மனியர் இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கும் நிபந்தனைகளுக்குக் கைச்சாத்திடினும் அந்நிபந்தனைகளுக்கிணங்கநடப்பார்களோவெனச் சிலர் ஐயுறக் கூடும். யுத்தத்தை நிறுத்திச் சமாதானப் பேச்சுகள் நடத்தத் தொடங்கியபோது நேசராசாங்கத்தார் செய்த நிபந்தனைகளுட் சிலவற்றை அவர்கள் நிறைவேற்றுது சாக்குப் போக்குச் சொல்லி நின்றது மெய்யே. சப்மறயின் கப்பல்களையெல்லாம் நேசராசாங்கத்தார் வசம் ஒப்புவிக்க வேண்டுமென ஒழுங்கு செய்யப்பட்டிருக்க அவைகளைக் கொடாது எய்த்துவிட எத்தனிததுமன்றி, புதியசப்மறயின் கப்பல்களையும் அவர்கள் இரகசியத்திற் செய்வித்தார்கள். இங்ஙனமெல்லாஞ் செய்தனராயினும், இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கும்நிபந்தனைகளைமீறி இவர்கள் பின்னும் தங்களை ஆபத்துக்குள்ளாக்குவார்களென நாம் நினைக்கவில்லை.

சென்ற ஐந்து வருடங்களாக நடந்த கொடிய யுத்தமானது இப்போது முழுதும் நின்றுவிட்டதெனலாம். இனி உலகம் இனிதுவாழும். இந்த யுத்தத்திலே லக்ஷக்கணக்கான சேனுவீரர் உயிர்துறந்தார்கள்; எத்தனையோ விலையுயர்ந்த கப்பல்கள் ஆழி வாய்ப்பட்டன; எத்தனையோ கோட்டை கோபுரங்களெல்லாம் நாசமாயின; எத்தனையோபேர் உணவுப்பொருட்களின் அருமையாற் பெருங் கஷ்டத்துக்குள்ளாயினர். இந்த யுத்தத்தில் இவ்வளவு நஷ்டமெல்லாம் நேர்ந்ததெனினும் இதனுலுலகத்துக்குப் பெரும் நன்மையுண்டாகப்போகின்றது. உலகத்தைத் திருத்துவதற்கே கடவுள் இந்த யுத்தத்தை நிகழச் செய்தாரெனச் சொல்லலாம். பெரும் புயலடிக்கும்போது மரங்கள் பல சாய்வதுண்டு. ஆனால் புயல் ஒழிந்தபின் தப்பிநிற்கும் மரங்கள் அதிக செழிப்புற்று வளரும். அதுபோல இந்த யுத்தத்தால் இனி வியாபாரம் கிருஷிகம் முதலியன அதிகப்பட்டு உலகஞ் செழிப்பதுமன்றி எங்குஞ் சமாதானமும் நீதியும் உண்டாகும். இந்த யுத்தம் காரணமாக எழுந்த உணவுப்பொருட் குறைவைக் கண்டு எங்கும் இப்போது உணவுப் பொருட்களை அதிகப்படுத்த முயற்சி செய்யப்படுகின்றதன்றோ? ஜர்மனியர் சமாதானத்துக்குக் கைச்சாத்திட்டு அமைதியாய் வாழத் தொடங்கும்போது தங்கள் வியாபாரத்தை அவர்கள் அதிகப்படுத்தத் தொடங்குவார்கள். அப்போது மற்றைய தேசத்தவர்களும் தங்கள் வியாபாரத்துக்கு நட்டமவராதபடி காக்க எத்தனிப்பார்கள். இனிச் சர்வசாதிச் சங்கம் (League of Nations) ஏற்படுத்தப்படும்போது சகலசாதியாரும் தன்னிஷ்டமுற்று வாழ்வார்கள். பெரியசாதியார் இனிச் சிறியசாதியாரை வருத்த இடமுண்டாகாது. ஆங்கிலராயிருந்தாலுஞ்சரி பிரான்சியராயிருந்தாலுஞ்சரி எல்லாரும் இச்சங்கத்துக்குக்கட்டுப்பட்டவர்களேயாவர் எந்தச் சாதியார் இன்னும் தன்னிஷ்டமடையாதிருக்கின்றார்களோ அந்தச்சாதியார் அதனை அடைக்கூடிய நிலைக்கு வரும்போது இச்சர்வசாதிசங்கமூலமாக அதனையடைய அவர்கள் இயன்றவர்களாவார்கள்.

இந்த யுத்தம் முடிந்து உலகத்திற் சமாதானமும் நீதியும் உண்டாகத்தக்கதாகச் செய்த ஈஸ்வரனுக்கு ஸ்துதி யுண்டாவதாக.

இந்திய அரசுமுறைத் திருத்தம்.

இந்திய அரசமுறைத் திருத்த விஷயமாக இந்திய மந்திரியாராகும் மெஸ். மொன்றேக்கு அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்திய அரசமுறைத் திருத்தச் சட்டம் பாளிமேர்துச் சபையில் இரண்டாம் முறையாக வாசிக்கப்பட்டிருக்கின்றது. இச்சட்டத்தின்படி இந்திய அரசு இரு பகுதியாக நடைபெறும். சில வேலைப்பகுதிகள் (Departments) பிரிட்டிஷ் எக்சிக்கியூற்றிவ் (Executive) கவண்மேந்தார் பரிபாலனத்தின் கீழும் சில வேலைப்பகுதிகள் ஊரார்களால் தெரியப்படும் பிரதிநிதிகளின் பரிபாலனத்தின் கீழும் நடைபெறும். பிரிட்டிஷ் "எக்சிக்கியூற்றிவ்" கவண்மேந்தார் பாளிமேர்துச் சபைக்கும், ஊர்ப்பிரதிநிதிகள் தம்மைத் தெரிவு செய்யும் ஊரார்களுக்கும் உத்தரவாதிகளாயிருப்பார்கள். மெஸ். மொன்றேக்கு அவர்கள் இச்சட்டத்தைப் பற்றிப் பேசியபோது இந்தியாவுக்குப் படிப்படியாக அரசுரிமைச் சலாக்கியங்கள் ஈந்து ஈற்றில் முழு அரசுரிமைச் சலாக்கியமும் கொடுக்கப்படவேண்டுமென்பது ஆங்கில அரசின் அபிப்பிராயமென்றும், இப்போது பிரிட்டிஷ்காரரின் பரிபாலனத்தின் கீழ் விடப்பட்டிருக்கும் வேலைப்பகுதிகளும் படிப்படி ஊரவர்கள் பொறுப்பில் விடப்படுமென்றும், இந்தியாவில் எப்போதாகுதல் மாறுதலுண்டானதில்லை யென்றும், இனிமேலுமுண்டாகப் போவதில்லை யென்றும், மற்றைய தேயத்தவர்களுள் உண்டாகியிருக்கும் அதிர்ச்சி இவர்களுளுண்டாகவில்லை யென்றும் சிலர் கூறுகிறபது முழுது மபத்தமென்றும், இங்கிலாந்திலிருந்து இப்போது இந்தியாவுக்குத் திரும்பியிருக்கும் தமது இந்திய நண்பரொருவர் சென்ற பதினாலு மாசங்களுள் இந்தியாவிலே அரசியல் விஷயமாகப் பெருமதிர்ச்சி யுண்டாயிருக்கின்றதெனத் தமக்குச் சொல்லியிருக்கின்றாரென்றுஞ் சொல்லினர். இந்தியாவும் இலங்கையும் முன்னிருந்த நிலையில் இப்போதிருக்கவில்லை. கல்வியறிவு அதிகப்பட அதிகப்பட ஆங்கில அரசின்கீழ் முழுச் சுயராசச் சலாக்கியமும் பெற்று வாழ வேண்டுமென்னு மெண்ணம் பலர்மாட்டுதித்திருக்கின்றது. இச் சுயராசச் சலாக்கிய விஷயமாக இந்தியரவி லெழுந்திருக்கு மதிர்ச்சி மிகவு மதிகமென்பது நாம் சொல்லவேண்டியதில்லை.

இந்தியாவிலும் இலங்கையிலும் சாதிவித்தியாசம் சமயவித்தியாசம் மிக மிருக்கின்றமையால் சனங்களெல்லாரு மைக்கியப்பட்டுச் சுயராசநடத்திக்கொள்வது கூடாததாகுமெனச் சிலர் வாதித்து நிற்கின்றனர். இதைப்பற்றி மெஸ். மொன்ரேக்கு அவர்கள் பேசியபோது சாதிவித்தியாசம் சமயவித்தியாசம் இந்தியாவிலதிகமுண்டென்பது உண்மையேயென்றும், ஆனால் அரசியல் விஷயமாகத் தங்கள் காரியங்களைத் தாங்களே பார்த்துக்கொள்ளும் பொறுப்புச் சனங்களுக்குக் கொடுக்கப்படுமேயாது, அவர்கள் தங்கள் சாதிபேதம் சமயபேதத்தை யொழித்து ஐக்கியப்படுவதற்குச் சிறந்த வழியாகுமென மெஸ். மொன்றேக்கு அவர்கள் கூறியிருக்கின்றனர். மைசூர் திவானாகவும் திருவாங்கூர் திவானாகவுமிருந்த ஸ்ரீ. வி. பீ. மாதவராவ் அவர்களும் இங்ஙனமே கூறியிருக்கின்றனர். இவர் சிறிதுகாலத்துக்குமுன் சென்னை மாகாணச் கொன்பெறென்ஸில் அக்கிராசனம் வகித்திருந்தபோது சனங்களுக்கு அரசுரிமைச்சலாக்கியங்கள் கொடுத்தல் அவர்கள் தங்களுள் இருக்கும் சாதிபேதம் சமயபேதத்தை மறந்து ஒற்றுமையாதற்குச்சிறந்தவழியாகுமென்பதைத் தாம் தமது அநுபவத்தி லறிந்திருக்கின்றாரெனக் கூறினர்.

மெஸ். மொன்ரேக்கு அவர்கள் இந்த அரசுரிமைச் சட்டத்தைக் கூடியவிரைவில் அரங்கேற்ற வேண்டுமெனச் சொல்லியபோது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் இந்தியாவும் பங்கு பற்றுவதற்குப் பாளிமேந்துசபை தடைசெய்யமாட்டாதென்பது தமது நம்பிக்கையென்றும், எவரேனும் அரேபியருக்கும் செக்கோசிலாவோ சாதியாருக்கும் சுயஆட்சிச் சலாக்கியம் கொடுத்திருக்கின்றார்களென்றும், அங்ஙனமே இந்தியாவுக்குங் கொடுக்கப்படவேண்டுமென்றும், இடபேதம் சமயபேத சாதிபேதம் முதலியவற்றுண்டாகிய இடையூறுகளை எங்ஙனம் ஆங்கிலர் படிப்படி நீக்கி முழுச் சுயராசச்சலாக்கியங்களையும் பெற்றார்களோ அங்ஙனமே இந்தியாவும் ஆங்கிலவரசின் பாதுகாப்பின்கீழ் படிப்படி சுயராசச் சலாக்கியங்களைப்பெற்று ஈற்றில் முழுச்சலாக்கியங்களையும் பெறவேண்டுமென்றும், இந்தச் சட்டம் அரங்கேறுமாயின், இந்திய சனங்கள் சுயஆட்சி விஷயமாக மேலுமடைய விரும்புஞ் சலாக்கியங்களை அடைந்துகொள்வது இனி அவர்களது கடமையாகுமென்றும், இப்போது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும்பொறுப்புக்களையவர்கள் சரிவர நடத்திக்கொண்டால் ஆங்கிலர்வசமிருக்கும்பொறுப்புகளும் படிப்படி அவர்களிடம் ஒப்புவிக்கப்படுமென்றும், பாளிமேந்துச்சபை இந்தியாவுக்கு அதிக உதவி செய்யும் விருப்பமுடையதாயிருக்கின்றதென்றும் சொல்லினர்.

இச்சட்டம் ஊர்ப்பிரபுக்கள் சபை [House of Commons]யில் மூன்றுமுறை முறை வாசிக்கப்பெற்று அரங்கேறிய பின் பிரபுக்கள் சபை [House of Lords]யிலும் இது அரங்கேறல் வேண்டும். பிரபுக்கள் சபையிலும் இது அரங்கேறிச் சட்டமாகுமாயின் இலங்கைக்கும் விரைவில் சில அரசுரிமைச் சலாக்கியங்கள் கொடுக்கப்படுவது நிச்சயமே.

நீதிபோதம். ௧௦.

சோமேசர் முதுமொழி வெண்பா.

இனியவைகூறல்.

இன்சொலிராம னியம்ப விரேணுகை சேய், துன்பமொழியே புகன்றன் சோமேசா-அன்புடைய, 'இன்சொலினி தீன்றல் காண்பா னெவன் கொலோ, வன்சொல் வழங்குவது'.

ப-ரை: இராமன் இன்சொல் இயம்ப-ஸ்ரீ. இராமர் இனிய வார்த்தைகளைக் கூறவும், இரேணுகை சேய் - இரேணுகையின் புதல்வனாகிய பரசுராமர், துன்பமொழியே:புகன்றன் - துன்பத்தைத்தரும் (வன்) சொற்களையேசொன்னார்; சோமேசா-சோமேசரே, அன்புடைய-அன்புள்ள; இன்சொல்-(பிறர்சொல்லும்) இனியசொற்கள், இனிது ஈன்றல்-(தனக்கு) இன்பந் தருதலை; காண்பான்-அநுபவித்து அறிபவன், வன்சொல் வழங்குவது எவன்-(அவற்றைவிடுத்து) கடுஞ்சொற்களைப் (பிறரிடத்தே) பேசுவது என்ன பயனைக்குறித்து, எ-று.

ஸ்ரீ. இராமர் இனிய சொற்களைக் கூறவும் பரசுராமர் அவற்றை விடுத்து வன் சொற்களைப் பேசித் துன்ப மடைந்தார்; ஆனதால் பிறர் சொல்லும் இன்சொற்கள் தனக்கு இன்பந் தருதலைக் கண்டவன் பிறரிடத்தே தான் வன் சொற் கூறுவதால் அடையும் பயன் என்னை (யாதுமில்லை) யென்பதாம்.

வி-ரை: இரேணுகைசேய் - இரேணுகையின் மகனாகிய பரசுராமர். ஏகாரம், தேற்றம். எவன், எதிர்மறைப்பொருட்டு; கொல், ஓ, அசைகள்.

ஸ்ரீராமர் இன்சொல் இயம்பவும் பரசுராமர் வன்சொற்கூறித் தன்வலிமையிழந்த வரலாறு:

ஸ்ரீராமர் மிதிலையிற்சென்று சனகன் புதல்வியாகிய சானகியை மணமுடித்து, தமது பிதாவாகிய தசரதர் முதலானோருடன் அயோத்திக்கு மீண்டுசெல்லும் மார்க்கத்தில், பரசுராமர் வெஞ்சினமுடையராய் அவருக்கெதிரேவருதலும் அது கண்ட தசரதர் நடுநடுங்கி அப்பரசுராமருடைய பாதங்களில் வீழ்ந்து "அருந்தவக்குன்றே, நீர் கொண்ட சினத்தணித்து இச்சிறுவனைக் காத்தல் வேண்டும்; மும்மூர்த்திகளன்றி அற்பமானுடர் உமது சினத்திற்கு ஈடாகார். உலகத்தை முனிந் தவரே எம்மை முனியாதீர்" எனப்பலவாறு இரக்குகின்றார். பரசுராமர் தசரதர் வார்த்தையை அலட்சியஞ்செய்து ஸ்ரீராமரை நோக்கி "நின் குலத்தவரையெல்லாம் வதைத்துவருகின்றேன்; நெடுநாள் யுத்தமின்மையால் என் புயங்கள் தினவுற்றன; நீ யொடித்த வில்லின் இயல்பைச் சொல்லுவேன் கேள்: மயனெனுந் தச்சன் இரு விற்களைச் செய்து ஒன்றைச் சிவபிரானிடத்தும் மற்றதைத் திருமாலிடத்துங் கொடுத்தான்; இருவிற்களுள்ளும் எவர்மாட்டுள்ள துமிக்க வலிமை யுடையதென்னுஞ் சந்தேகந் தேவர்கட்கிடையேயுண்டாக, அவர்கள் பிரமனை யடைந்து அச்சந்தேகத்தை நீக்கும்வண்ணம் வேண்ட, பிரமா, சிவபிரானுக்கும் விஷ்ணுவுக்குமிடையே அமர்மூட்டிவிட இருவரும் கார்முகங்களை வளைத்துச் சமர்செய்யும்போது ஈசன் பிடித்த வில்லுச் சிறிது ஊனமுற்றது. உருத்திரமூர்த்தி வெஞ்சினமுற்றனர்; அதுகண்ட தேவர்கள் பெரும் அச்சங்கொண்டவராய், இருவரும் புரியும் யுத்தத்தை யொழித்தருளும்வண்ணம் வேண்டினர். முக்கண்மூர்த்தி சமர்செய்தலை விடுத்துத் தாம் திருக்கரத்திற் கொண்ட தநுவை இந்திரனிடம் கொடுத்தனர். திருமால் தாம் கைக்கொண்ட வில்லை இரிசிகமுனிவரிடங்கொடுக்க, அம்முனிவர் என் தந்தையாகிய சமதக்கினி முனிவருக்குக் கொடுக்க, அவர் எனக்கீந்தார்; அதுவே இவ்வில்லாகும். சிவபிரான் விண்ணவர் கோனுக் குதவிய வில்லையே நீ முன்னர் முரித்தனை; இவ்வில்லை வளைப்பையாகில, உன்னை யான் ஆடவர் திலகமாக மதித்து, யான் உன்னுடன் புரியுமாறு கருதிவந்த யுத்தத்தையும் புரியாது செல்கின்றேன். இராமா, இன்னுங்கேள்; உன்குலத்துதித்தவனான கார்த்தவீரியன், அருந்தவக்குன்றாகிய எந்தையைக் கொன்றமை காரணமாக, அரசர்தொடக்கம் இதுவரையில் உன் முன்னோரை யெல்லாம் யான் பரித்திருக்கும் இம்மழுப்படையாற் கொன்று அவர்கள் உதிர ஆற்றலாகிய சிமந்தபஞ்சகமென்னுந் தடாகத்தில் என் தந்தைக்குரிய கடன்களை முடித்துவருகின்றேன்; எனக்குக்கிடைத்த இராச்சியத்தைக் காசிபமுனிவருக்குக் கொடுத்தேன்; என் பகைவரையெல்லாம் வேரோடுகளைந்தேன்; யான்தென் திசையிலுள்ள சைலமலையில் தவஞ்செய்துகொண்டிருக்கையில், நீ யொடித்த தநுவோசை கேட்டுச் சினத்துடன் இங்கு வந்தேன்; நீ ஆற்றலுடையையாயில், என் கரத்திலுள்ள இந்த வில்லை வளைக்குதி" என்று சொல்லித் தநுவை இராமனிடம் நீட்ட, அவர் புன்னகை புரிந்து வாங்கி வளைத்து அம்புகளைத் தொடுத்துப் பரசுராமரை நோக்கி "ஆதவன் குலத்[illegible]அரசரை யெல்லாம் அதஞ்செய்த பரசுராமா, நீ முனி புதல்வனாதலினாலும், துறவியாதலினாலும் உன்னைக் கொல்லத்துணிகிலேன்; இத்தநுவில்யான்தொடுத்த அம்பிற்கு இலக்குக்காட்டுதி" யென்றார். பரசுராமர் நடுநடுங்கி "ஐயனே யான் செய்த பிழையனைத்தையும் பொறுத்தருளவேண்டும்; உமது அவதார மகிமையை இன்றேயறிந்தேன்; உமது பாணத்துக்கு இலக்காக என் தவத்தைக் கொள்ளுதிர்" என்று கூறிநின்றார். ஸ்ரீராமர் அம்பைப் பிரயோகிக்க, அது பரசுராமர் தவம் முழுவதையுங் கொள்ளைகொண்டது. பரசுராமர் ஸ்ரீராமரது அநுமதி பெற்றுச் சைலமலையுற்று மீண்டாரென்பதாம்.

மஹாசங்காபிஷேகமும் அன்னதானமும்

ஸ்ரீமத். அமிர்தானந்த சுவாமிகளது முயற்சியால் சென்ற சோமவாரத்தன்று பகல் யாழ்ப்பாணம் கதிரேசன் கோவிலில் ஸ்ரீ அரு. அரு. சோம. அவர்கள் உபயமாக கதிர்வேலாயுதசுவாமிக்கு நவோத்தர சகஸ்ர மஹாசங்காபிஷேகமும் ஆயிரக் கணக்கான ஆதுலர்க்கு அன்னதானமும், இரவு வெள்ளிமயூரவாகனாரூடராய் பாலசுப்பிரமணிய சுவாமிக்கு அலங்காரோற்சவமும், நேற்றையதினம் பிரதோஷபுண்ணியகாலத்தில் வண்-வைத்தியேஸ்வரசுவாமிக்கும் வாலாம்பிகையம்பாளுக்கும், யாழ்ப்பாணம் குத்தகைகாரன் ஸ்ரீ வி. கதிரேசபிள்ளையவர்க ளுபயமாக முறையே நவோத்தரசகஸ்ர மஹாசங்காபிஷேகமும் நவோத்தரசதசங்காபிஷேகமும் இரவுபஞ்சமூர்த்திகட்கும் அலங்காரோற்சவமும் நிகழ்ந்தன. குறித்த தினங்களிற் காலை இரு ஆலயங்களும் சுற்றுப் பிராகாரங்களும், வெளிப்பிராகாரத்திலுள்ள கடைகளும் முன்றில்களும்சுத்திசெய்து, கமுகு கதலிகளை நாட்டியும், மாவிலை தோரணம் மாலை இளநீர் நுங்கு முதலானவைகள் விதானித்தும், பலவர்ணத்துகில்களைத் தூக்கியும், குடை ஆலவட்டம் முதலியனகாட்டியும் பார்ப்பவர் களைவர் மனங்கவரத்தக்க வண்ணம் நன்கு அலங்கரிக்கப் பெற்றிருந்தன. வீதிகளெல்லாம் பெருகநீர் பலமுறையுந் தெளிக்கப்பெற்றிருந்தன; மாலைக்காலமாகவே திருக்கார்த்திகைச் சர்வாலயதீபதினத்திரவுபோல எங்கும் தீபங்கள் விளக்கின. ஆயிரக்கணக்கான மகளிரும்ஆடவரும் மேற்படி தினங்கள் முழுவதிலும் புனிதராய் ஆலயத்துக்குப் போவாரும் வருவாருமாகக் காணப்பட்டனர். இன்று வண்-கிழக்கு ஸ்ரீ சடையிதசுவாமிகளன்னசத்திரத்தில் மேற்படி குத்தகைகாரனவர்கள் பொறுப்பில் ஆயிரக்கணக்கான ஆதுலர்க்கு அன்னதானமும் நிகழ்கின்றது. மிக்க சிரத்தையோடும் பெருந் தொகைப்பொருள் செலவுசெய்து இவ்வுத்தமதருமத்தைச் செய்த மேற்படி தனவந்தர்களது இச்செய்கை பெரிதும் பாராட்டற்பாலதும் பின்பற்றற்பாலதுமேயாம்.

சமாச்சாரம்.

சிதம்பராலயமகோற்சவம்:—தரிசிக்க முத்திதரும் தலமாகிய சிதம்பரத்திலே நடராசமூர்த்திகோயிலில் இத்தி 11உ துவஜாரோகணமாகி மகோற்சவம் வழமைபோல் சிறப்புற நடைபெறுகிறது. வருகிறவியாழக்கிழமை ரதோற்சவமும் அடுத்தநாளாகும் ஆனி உத்தர புண்ணிய தினத்தன்று காலை ஸ்ரீமத். நடராஜமூர்த்திக்கும் சிவகாம சுந்தரி அம்பாளுக்கும் மஹாபிஷேகமும் தரிசனமும் நிகழும்.

மாணிக்கவாசகசுவாமிகள்குருபூசை:—சமயகுரவர்களி லொருவராகிய ஸ்ரீமத். மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை ஆனிமக தினமாகிய வருகிற புதன்கிழமையன்று நிகழும்.

ஓர் புதிய அத்துவக்காத்:—ஓர் பெருந் தனவந்தரும் கல்வியறி வொழுக்கங்களாற் சிறந்தவருமாகிய கந்தர்மடம்ஸ்ரீ. வை. சி. சி. குமாரசுவாமி B. A. அவர்கள் இலங்கைக் கோடுகளில் அத்துவக்காத்தாக வேலை பார்ப்பதற்குத் தத்துவம் பெற்றிருக்கின்றனர்.

நெல்லின் விலையை மட்டுப்படுத்தியது:—யாழ்ப்பாணத்திலே நெல்லு மூடை 1 ரூபா 11 சதம 37-க்கு மேலும் புசல 1 ரூபா 3 சதம 50 க்கு மேலும் விற்கக்கூடா தென்றும் மூடை 1 மூன்றேகால் புசலுக்குக் குறையாததா யிருக்க வேண்டு மென்றும ஆளுக்கு 5 மூடைகளுக்கு மேல் விற்கக் கூடாதென்றும் ஏசன்றரவர்கள் கட்டளை செய்திருக்கின்றனர்.

யுத்த சமாதானக் கொண்டாட்டம்:—யுத்த சமாதானக் கொண்டாட்டம இலங்கை முழுவதிலும் கொண்டாடப்படும். இதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்ய கொழும்பிலோர் கம்மிற்றி நியமிக்கப் பட்டிருக்கின்றது. இக் கம்மிற்றியார் கவண்மேந்து ஏசண்டர்மாரை அவரவர் மாகாணத்தில் இக் கொண்டாட்டத்திற்கு வேண்டிய ஒழுங்குகளை செய்யும்படி கேட்டிருக்கின்றனர். வருகிற ஆகஸ்டு மாசம்வரையிற் முன் இக் கொண்டாட்டம் நடைபெறும்.

விவாகம்:—கொழும்பில் பகிரங்க வேலைப் பகுதியில் ஓர் கிளாக்காக விருப்பவரும் மானிப்பாய் உடையார்ஸ்ரீ. மாணிக்கவாசகரின் புத்திரனுமாகியஸ்ரீ- அருணாசலத்துக்கும் அத்துவக்காத் ஸ்ரீ. திருநாவுக்கரசு அவர்களின் மைத்துனர் கொக்குவில் கிழக்கு ஸ்ரீ. சுப்பிரமணியர் இராமலிங்கமவர்களின் புத்திரிக்கும் இந்த ஜூன் மீ ௧௩உ நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் விவாகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. தம்பதிகளிருவரும் சுகவாழ்வெய்தி நீடூழி வாழச் சிவபிரான் திருவருள்புரிவாராக.

ஓர் உரு தீக்கிரை யானது:—வல்லுவெட்டித் துறையில் வந்துநின்ற ஓர் பெரிய உரு தீப்பற்றி முழுதுமெரிந்து போனது. இதிலேற்றப் பட்டிருந்த சரக்குகள் இறக்கப்பட்டபின்பே இது தீக்கிரையாயிற்று. இது இரண்டு வருடங்களுக்கு முன் செய்யப்பட்ட ஓர் புது மரக்கலம. இது ஏறக்குறைய ஒருலக்ஷம்ரூபா பெறுமதி யுள்ளதாம். இதில் நாலில் மூன்று பங்கு இங்குள்ள ஓர் நாட்டுக் கோட்டையாரின் கடையொன்றுக்கும் மற்றப் பங்கு வல்லுவெட்டித் துறையைச் சேர்ந்த ஒருவருக்கு முரியதாம. யாரோ சத்துராதிகள் இதற்கு நெருப்பு வைத்திருக்க வேண்டுமென எண்ணப்படுகின்றது.

குடி வெறியுங் கத்திக் காயமும்:—சலட்டியிலுள்ள கமுவிகள் சிலரும நாயன்மார்கட்டிலுள்ள கமுவிகள் சிலரும ஓர் வேள்விக்குச் சென்று குடித்து வெறிகொண்டு திரும்பியபோது வழியில இருபக்கத்தாருக்கு மிடையில சண்டையுண்டாகிச் சிலர் பாரதூரமான காயமடைந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப் பட்டனர்.

ஓர் ஐயர் கோச் வண்டியி லகப்பட்டிறந்தது:—தன்ஞலையைச்சேர்ந்த ஓர் ஐயர் சென்ற வியாழக்கிழமை யாழ்ப்பாணம் கதிரேசன் கோவிலுக்குச் சென்று திரும்பிய போது, கோவில் வாசலுக் கணித்தாய் யாழ்ப்பாணத்தார்க்கும் பருத்தித் துறைக்கு மிடையிலோடும் "கோச்" வண்டியிலகப்பட்டு கோச்சுச்சில்லு கழுத்தைநசித்துவிட உடனே உயிர் துறந்தனர்.

ஐக்கிய நாணய சங்கங்களின் மகா சபைக் கூட்டம்:—ஐக்கிய நாணய சங்கங்களின் மகா சபைக் கூட்டமொன்று கொழும்புச் சட்டநிரூபண சபை மண்டபத்திலே தேசாதிபதியவர்களின் அக்கிராசனாதிபத்தியத்தின் கீழ் வருகிற ஜூலைமீ ௨-௩உ நடைபெறும்.

கடிதம்.

பிரபஞ்சவிசாரம். ௨.

சித்துப் பிரபஞ்சம்.

சித்துப்பொருள்களாகிய ஆன்மாக்களையும் கடவுள் சூனியோபாதானமாகச் சிருட்டித்தார் என்பது கிறிஸ்தவர் கொள்கை. இந்தக்கொள்கையும் அசம்பாவிதமேயாம் என்பதைப் "பிரபஞ்சவிசார"முடையார் விளக்கிக் காட்டியபின்னர், அந்தச் சிருட்டிக்கு முதற்காரண மொன்றுளதென்றுவாதிக்கும் கிறிஸ்தவர்களுக் கிலகுவாராதலால், அவர்கள் கொள்கையையும் எடுத்துக் கொண்டு, அதனை உடன்பாட்டானும் எதிர்மறையானும் கண்டித்தொழுக்கினர். இதனைக்கண்ட பிரகாசர், ஆசிரியர் முன்னொடு பின் மலைவுறவைக்கலாயினர் என்று அமைபாத குற்றம் பாரிக்கின்றார். ஒருகொள்கையை உடன்பாட்டானும் மறுதலையானும் கண்டிப்பது முன்னொடு பின் மலைவதாகுமோ என்பதைப் பிரகாசர் நியாயநூல் வல்லாரைக் கேட்டறிக. இது நிற்க.

பிரபஞ்சத்தை முதற் காரணமின்றிச் சிருட்டித்தன் மாத்திரமன்றி, இடையில் தோற்றுவித்த ஆன்மாக்களைக் கடவுள் நித்தியமும் நிலைபெறச் செய்வர் என்பதும் கிறிஸ்தவர்களுடைய கொள்கையாதலால், இக்கொள்கையும் ஆபாசத்தின்பாற்படும் என்பதைப் "பிரபஞ்சவிசார" ஆசிரியர் பலஏதுக்கள்கொண்டு தாபித்து, அந்த ஏதுக்களைச் சிறுவரும் அறிந்துகொள்ளுமாறு காரண காரிய முறையின் வைத்து விளக்கிக்காட்டினர்கள். இங்ஙனம் விளக்கிக் காட்டிய ஆசிரியர் கூற்றைப் பிரகாசர் அநுவதித்துஎடுத்துக்கொண்டும், அவர் தமதாபாசத்தை யாதொரு நியாயங்கொண்டு நிறுத்தினர் அல்லர் என்கிறார்! இவர் தமது கடவுள் இன்மையை உண்மையாக்கியது போலத் தாமும் உண்மையை இன்மையாக்கிவிடத் துணிந்தார்போலும்!

தோன்றிய பொருள்கள் அனைத்தும் அழிவுறும் என்பது பௌதிக சாத்திர பண்டிதர்களாலும் நிறுத்தப்பட்டதோர் உண்மை. இவர்கள் அழிவுறும் என்று சொல்வதெல்லாம் முதற்காரணத்தில் ஒடுங்குதலேயேயாம். இங்ஙனம் ஒடுங்குதலையே 'அழிவுறுதல்' என்று சைவசித்தாந்தம் விரிவுற எடுத்துவிளக்கும். 'பிரபஞ்சவிசார' ஆசிரியர் எடுத்துக்காட்டிய அழிவுமாகும் இந்த ஒடுக்கமேயாம். இங்ஙனமேயாகவும், 'மரமறியாதார்க்கு இலைபிடுங்கிக் காட்டினாற்'போல பிரகாசர் இக்கூற்றை எடுத்துக்கொண்டு பொருள்கள் அழிந்து சூனியமாவதல்ல என்று வாதிக்கின்றார். தோன்றிய பொருள்கள் அனைத்தும் அழிவுறும் என்று 'பிரபஞ்சவிசார' ஆசிரியர் எடுத்துக் காட்டுவதெல்லாம் முதற் காரணத்தில் ஒடுங்குதலேயே என்பதைப் பிரகாசர் தமது உள்ளத்தழுத்திக் கொள்வாராக.

சடப்பொருள்கள் பூதபஞ்சீகரணத்தால் அமைவனவாதலின் அவைகள் அழிவுறுதல் சாலும், சித்துப்பொருள்கள் பூதபஞ்சீகரணத்தால் அமைதலின்மையின் அவைகள் அழிவுறும் என்பது கூடாதென்று பிரகாசர் வாதிக்கின்றார். 'தோற்றம்' என்பது முதற்காரணங்களைப் பஞ்சீகரணப்படுத்துவதால், அவற்றின் சத்திகளை கிளர்த்துவதால் பெறப்படும் ஒரு நிலை. இந்த நிலை இடையில் தோன்றுவதாகலின், இது காலத்தால் தாக்குண்பதும், அங்ஙனம் தாக்குண்ட வழி விகாரம் எய்துவதும், அங்ஙனம் எய்தியவழித் தமது நிலை குலைவதும் பொருள்கள் எவற்றுக்குமுரியதொரு சாமானிய தருமமாம். இது கடவுளுடைய சிருட்டியிலே நாம் எல்லாம் பிரத்தியட்சத்திற் காணக் கிடப்பதொரு உண்மை. இந்த உண்மையைக் கடவுள் சித்துப்பிரபஞ்சத்தளவில் பிழைபடச் செய்வர் என்றால் அவர் விகாரத்துவம் உடையர் எனப்பட்டுக் கடவுள் இலக்கணத்திற் பிறழ்ந்துவிடுவர் என்க.

[இந்த இடத்தில் பிரகாசருக்கு நாம் எடுத்துக் காட்டத் தக்கதோர் உண்மை உண்டு. அதனை அவர் சிந்திப்பதுண்டாயின் தமது சமயத்தின் ஆபாசத்தைத் தாமே காணவல்லுநராவர்:— முதற்காரணங்களைப் பஞ்சீகரணஞ் செய்தால் சடப்பொருள்கள் தோன்றுவது போலச் சித்துப்பொருள் தோன்றுவது கூடாது. சித்துப்பொருளுக்குரிய சைதன்னிய சத்தி கலவையால் பெறத்தக்கதல்ல. அங்ஙனம் அது பெறத்தக்கதென்பது நாத்திகத்தடிப்பன்றி ஆத்திகமுறையாகாது. இந்த நாத்திகத்தடிப்பை ஆத்திகராகிய பிரகாசர் எடுத்தாள்வது கூடாது. ஆகவே யாதொரு பொருட்கலவையால் சித்துப்பொருள் இடையில் தோன்றுவது கூடாதெனப்படும் போது, அது அநாதியாகத் தானே யமைந்து விளங்கும் என்பது உண்மையை நுனித்து நோக்கவல்லார்க்கு இனிது புலப்படும்.]

உலகத்திலே நாம் காணக்கிடப்பதெல்லாம் சடப்பிரபஞ்ச தோற்றமன்றிச் சித்துப் பிரபஞ்ச தோற்றமன்றாதலால், சடப்பிரபஞ்சத்துக்குரிய தோன்றுமுறை ஒடுங்குமுறைகளைச் சித்துப்பிரபஞ்சத்துக்கு அமைத்தல் சாலாதென்று பிரகாசர் சொல்லுவாராயின், சித்துப்பிரபஞ்சத்தைக் கடவுள் இடையில் சிருஷ்டித்தமையினைத்தானும் நாம் கண்டதல்ல. அதன் தோற்றத்தை நாம் சடப்பிரபஞ்சத் தோற்றங்கொண்டு துணிவதுண்டாயின், அதன் நாசத்தையும் அங்ஙனமே துணிதல் வேண்டும் எனக. அன்றியும் கடவுள சடப்பிரபஞ்சத் தோற்றத்துக்கு ஒரு முறையையும் சித்துப் பிரபஞ்சத்துக்குப் பின்னொரு முறையையும் எடுத்தாளுவதுண்டாயின் அவர் விகாரி எனப்பட்டுக் கடவுள் இலட்சணத்திற் பிறழ்ந்திடுவர் என்பதூஉம காண்க.

ஆன்மநித்தியத்துவம் அநாவசியகம்:

தோன்றிய பொருள்களெல்லாம் அழிவுறுவது நியதமாகியதோர் பரமசத்தியமாக, இந்தச் சத்தியத்துக்கு மாறாக, இடையில் தோன்றிய ஆன்மாக்களை நித்தியமும் நிலைபெறச்செய்ய வேண்டிய அவசியம் சிறிதும் இல்லை என்று ஆசிரியர் எடுத்துக்காட்ட, அவற்றை அழிக்க வேண்டிய அவசியந்தான் என்னை என்று பிரகாசர் குதர்க்கம் பேசுகிறார். உண்மையை நிலைநிறுத்த வேண்டியதே அந்த அவசியம் என்பதை அவர் சிந்திக்க மறந்தனர்போலும்!

பிரகாசரிடத்திலே குதர்க்கப் பிரசங்கமாத்திரமல்ல நாத்திகவாசமும் வீசுகின்றது. மூலபூதங்கள் அறுபது வரையில் உண்டென்றும், இவை ஒருகாலத்தும் அழிவுறுவதில்லை என்றும் பௌதிக சாத்திர பண்டிதர் எடுத்துக் கூறுவாராதலால் பூதங்கள் நித்தியமாம்பொழுது ஆன்மாக்கள் நித்தியமாவது ஏன் கூடாதென்று பிரகாசர் வினவுகின்றார். நாத்திககொள்கையைத் தலைமேற்கொண்டு பாராட்டுதலையே இவர் தமது தொழிலாகக்கொண்டால் பிரபஞ்சத்துக்குக் காரணமாகிய மூலபூதங்கள் எல்லாம் அநாதியாயுள்ளன என்னும் கொள்கையுமன்றோ இவர் அங்கீகரிக்கவேண்டும்? அக்கொள்கைபற்றியன்றோ நாத்திகர்எல்லாம் மூலபூதங்களை அநாதி நித்தியம் என்று சாதிப்பது? அக்கொள்கையைப் பிரகாசர் உடன்படுவாராயின் ஆன்மாக்களையும் அநாதிநித்தியம் என்றன்றோ இவர் ஒப்புதல் வேண்டும். இவர் தமது சமயத்துக்கு அநுகூலஞ் செய்வார்போன்று பிரதிகூலஞ்செய்தலை அறிந்திலர்.

புதிதோன்று.

"மனுடனது மறுமைவரையுந் தீராத ஆசைகளும், அவனுடைய புத்திக்கிரகணத்தின் கரை காணாத விசாலமும் ஆழமும் என்னும் இவைகளை நாம் பரியாலோசனை செய்வதுண்டாயின், அவன் நித்தியமும் ஜீவிக்கும்பொருட்டாகவே உண்டாக்கப்பட்டான் எனத் துணியவேண்டியவர்களாவோம்" எனப் புதிதாயதொரு நியாயத்தைப் பிரகாசர் கண்டுபிடித்துக்கொண்டார். நியாயவலியால் நான்கு புறத்தும் நெருக்கப்படும்பொழுது இங்ஙனம் ஓர் ஓர் புதுநியாயத்தைத் தேடி அதன்கட் சரண் புகுவது தோல்வித்தானத்திற் பட்டார்க்குரியதொரு பொது இலக்கணந்தான். ஆனல் உண்மையைக் காணவேண்டும் என்னும் விருப்புடையார் இங்ஙனம் செய்யார். இவர் புதிதாகக் கண்டுபிடித்த நியாயப்போலியை இவருக்கு விளக்கிக் காட்டுவோம்.

மனிதனுடைய ஆசைகள் தீராதனதாமோ? அவனுடைய புத்திக் கிரகணம் எல்லையற்றதுதானுமோ? அங்ஙனமாயின் அதனைக் கடவுளாக வன்றோ மதித்தல்வேண்டும் என்பதைப் பிரகாசர் மறந்துவிட்டார். இனி அவனுடைய தீராத ஆசைகளைத் தீர்த்தற்பொருட்டுத்தானோ கடவுள் அவனை நித்தியமும் நிலைபெறச் செய்வது? அங்ஙனமாயினும் அவனது தீராத ஆசை எப்படித் தீருமோ? தீராதொன்றைத் தீர்ப்பது கடவுளாலாகுமோ? ஆகுமெனின் அதனைத் தீராத ஆசையென்பது எங்ஙனம்? இனி அந்தத் தீராத ஆசையைத்தான் கடவுள் தீர்ப்பாரா? தீர்ப்பார் எனின், அங்ஙனம் தீர்ப்பது நித்திய நிரயத்தில் விட்டுத்தானுமோ? இந்தப் போலி நியாயங்களால் இவருடைய சமயத்துக்கு எய்தற்குரிய சலாக்கியம் சிறிதும் இல்லையென்பதைப் பிரகாசர் அறிந்துகொள்க.

சிருட்டியின் பயன்.

கடவுள் சடமுஞ்சித்துமாகிய இருகூற்றுப் பிரபஞ்சத்தையும் யார் பொருட்டுச் சிருஷ்டித்தார்? தமபொருட்டெனின் கடவுள் குறைவுடையராவர்; பிறர்பொருட்டெனின், பிறர் பொருட்டெனின், பிறர் ஒருவரும் இல்லாதபொழுது பிறர்பொருட்டுச் சிருட்டித்தார் என்பது கூடாது என்று இங்ஙனம் சிருஷ்டியின் பயனை நோக்கக் கடவுள் ஆன்மாக்களைச் சிருட்டித்தார் என்பது நியாயமுகத்து நிற்கமாட்டாதென்று 'பிரபஞ்சவிசார' ஆசிரியர் கிறிஸ்துமத ஆபாசத்தை விரிவுற எடுத்து விளக்குவர்.

இதனைக்கண்ட பிரகாசர் கடவுள் ஆன்மாக்களைத் தம்பொருட்டே சிருட்டித்தார் என்றும், கடவுள் புறத்தே தமக்கொரு பயனைவேண்டி நிற்பார் அல்லராயினும், அகத்தே ஒருபிரயோசனத்தைவேண்டிநிற்பர்என்றும், அங்ஙனமில்லையேல் அவர் சைதன்னிய விளக்கமில்லாத சடப்பொருளாய்விடுவர்என்றும் வாதிப்பர்.

கடவுள் சைதன்னியசொரூபியாதலால் குறைவுடையராதல் வேண்டும் என்பது ஒருவாற்றானும் பெறப்படாது. சைதன்னியத்துக்கு இலக்கணம் குறைவுடைமையல்ல; குறைவில்லாமையே பூரண சைதன்னிய இலக்கணம். கடவுள் அகத்தே குறைவுடையர் எனின் புறத்தே பூரணர் என்பது சிறிதும் கூடாது. ஆனல் கடவுள் பிரயோசனப்படுதல்வேண்டும்என்பதும், எனவே அவரை ஒழிந்த பிறபொருள்கள் உளவாதல் வேண்டும் என்பதும் சத்தியம். இதுபற்றியே சற்சமயமாகிய சைவசமயம், கடவுள் என்றுளரோ ஆன்மாக்களும் அன்றே உள என்றும், ஆனல் அந்த ஆன்மாக்கள் கடவுளின் வேறாக உளவாமாயின், கடவுளுடைய அகண்டித பூரண நிலை இழுக்குற்றிடுமாதலால், அவை கடவுளின் வேறுமாகாது, கடவுளும் ஆகாது, கடவுளோடு அத்துவிதசம்பந்தமுற்று விளங்கும்என்றும் பிரதிபாதிக்கும். இந்தகொள்கையின் திப்பியத்தை அறியாது பிரகாசர 'அகப்பயன்' 'புறப்பயன்' என்னும் மருட்கையிற்பட்டழுகின்றார். இவர் சைவசமயக் கொள்கைகளை வல்லார்வாய்க்கேட்டறிவாராயின் கடவுளுடைய உண்மைநிலையை உள்ளபடியே அறிய வல்லுநராவர். இவருடைய கொள்கையின்வழி கடவுள் தமது அகப்பயன் கருதி ஆன்மாக்களைச் சிருட்டித்தார் என்றால், அங்ஙனம் சிருட்டிக்குமுன் அவர் குறைவுடையராயிருந்தார் என்பதை இவர் சிந்திக்க மறந்துவிட்டார்போலும்.

வண்ணார்பண்ணை,
15—6—1919.

இங்ஙனம்,
க. வைத்தியலிங்கபிள்ளை.

புத்தக விளம்பரம்.

யாழ்ப்பாணம்
சைவபரிபாலனசபையாரால்
பிரசுரஞ்செய்யப்பெற்றன.

	ரூ. ச.
முதற் பாலபாடம் [சித்திரசகிதமானது]	௧0
இரண்டாம் பாலபாடம்	௧௫
மூன்றாம் பாலபாடம்	௨0
நான்காம் பாலபாடம்	௩0
ஐந்தாம் பாலபாடம்	௪0
ஆறாம் பாலபாடம்	௫0
கலாமஞ்சரி (இது எட்டாம் வகுப்பிலும், "ஆங்கில ஸ்கூல்லீவிங் சேர்ட்டிவிக்கற்" வகுப்பிலும் பயிலும் மாணவர்கட்குத் தமிழ்ப்பாடமாக உபயோகமாகும் வண்ணம் இயற்றப் பெற்றுள்ளது)	௫0
ஆத்திசூடி கொன்றைவேந்தன், உரையுடன்	௬
நமச்சிவாயமாலை, உரையுடன்	௬
வெற்றிவேற்கையுரை	௬
வாக்குண்டாமுரை	௬
நல்வழியுரை	௬
நன்னெறியுரை	௬
இனியவைநாற்பதுரை (ஆங்கில மொழி பெயர்ப்புடன்)	௧௨
இலக்கண வினாவிடை...	௧0
இரண்டு ௧௧-வதும் ௧௨-வதும்	௨௫
திருவாதவூரடிகள்புராண மூலம்	௨௫
இருபாவிருபது மூலமுமுரையும்... ...	௫0
திருச்செந்தூர்ப்புராணவுரை (இலேஸ்காகிதம்) ரூ.௧-௨௫,(நல்காகிதம்)	௧-00
கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் ...	௧0
கந்தசஷ்டி கவசம்	௩
சுப்பிரமணியசுவாமி விருத்தம்	௩
ஆறுமுகசுவாமி விருத்தம்	௩
சதுரகிரிமலைப் பேரின்பக்காதல்	௧0
பிள்ளையார்கதை	௧௨
பிரபஞ்சப் பெருவழக்கு	௧0
இந்துசமயி தாவரஜீவியாயிருத்தலேன்? ...	௧0
சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு) ...	௮
குமணசரித்திரம் "	௬
பஞ்சரத்தினத் திருப்புகழ்	௮
சோமவாரவிரதமான்மியம்	௧0

☞ இவைகள் இந்துசாதன ஆபீசிற் பெறற்பாலன. ஒரே இனத்திற் பத்துப் புத்தகம் வாங்குபவர்களுக்கு ஒரு புத்தகம் கழிவு கொடுக்கப்படும். தொகையாக வாங்குபவர்கட்குத் தகுந்த கழிவு கொடுக்கப்படும். சபையாரது பாலபாடங்களையே எல்லா வகுப்புகளிலு முபயோகிக்குஞ் சைவவித்தியாசாலைகட்கு இந்து சாதனப் பத்திரிகை இரயமின்றிக் கொடுக்கப்படும்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

விளம்பரம்.

தேவாலயங்களுக்கு உபயோகமான திறம் பட்டுக்குடைகள், ஆலவட்டம், கொடி, சுருட்டி, ஜாலர், மகரதோரணம், காவடிசகலாத்து, முதலானவைகள் இந்தியாவில் சித்திரவேலைக்காரர்களால் செய்யப்பட்டு நமது சாப்பில் சகாயமான கிரயத்திற்கு கொடுக்க விருக்கின்றன. இன்னும் அவர் அவர்கள் கேட்கும் ஓடர்களுக்குத் தக்கமாதிரித்தயாரித்துக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

மு. நாகலிங்கப்பிள்ளை
பறங்கித் தெரு,
யாழ்ப்பாணம்.

வியாபாரச் சமுதாயம்.

இச்சமுதாயத்தின் வண்ணார்பண்ணை இரண்டாம் இலக்கப் புடைவைக்கடைக்கு ஆவணி மீ 1உ தொடக்கமாக ஒரு மானேசர் தேவை. போதிய பிணை கொடுக்கவேண்டியது

வேண்டிய விபரங்களை மேற்படி சமுதாயத்தின் தலைவரிடங் கேட்டறியலாம்.

பிரபஞ்சவிசாரம்.

பிரபஞ்சஉற்பத்தியைக்குறித்து
உலோகாயதம், சாங்கியம், மீமாஞ்சம்,
பௌத்தம், மாயாவாதம்
முதலிய பூர்வக் கொள்கைகளையும்;
பௌதிகவாதம், பிரயோசனவாதம்,
சந்தேகவாதம், பரமாணுவாதம்,
பரிணாமவாதம், கிறீஸ்தவவாதம்
முதலிய நவீனக்கொள்கைகளையும்
தர்க்கமுறையால் ஆராய்ந்துகண்டித்து
சைவசித்தாந்த உண்மையைநாடி
யாழ்ப்பாணம்
ச. சபாரத்தினமுதலியாரால்
செய்யப்பட்டதோர் சிறந்த நூல்
௨௭0 பக்கங்கொண்டது
விலை ரூபா. ௧. சதம். ௫0.

வேண்டுவோர் நூலாசிரியரிடத்தும் சென்னபட்டினம் மயிலாப்பூர் ம. ா. ா. ஸ்ரீ சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளைஅவர்களிடத்தும் பெறறுக்கொள்க.

காசிப் பட்டுப் பீதாம்பரங்கள்.

சுத்தமான பட்டு] சகாய விலைகள் [நாணயமான ஜரிகை

பிரியமில்லாதவைகளைத் திருப்பிப் பெற்றுக் கொள்ளுவோம்.

கீழே கண்ட பட்டுத்தினுசுகள் எல்லா நிறத்திலும் கிடைக்கும்.

பட்டுச்சேலைகள்:—16 முழம் நீளம் 2½ அகலம் விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலைகள் உடல் சாதா விலை ரூபா 20முதல் 50 வரை. அதேமாதிரி சேலை உடலினும் ஜரிகைப்பூ புட்டா போட்டது. ரூபா 20 முதல் 100 வரை.

ரவிக்கை:—விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலைகள் உடல் சாதா 2 ரூபா முதல் 8 வரை உடலிலும்; புட்டா ஜரிகை பூவேலைசெய்தது. ரூபா 3-முதல் 20 வரை.

துப்பட்டாக்கள்:—6-முழம் 2½- அகலம் விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலை; உடல் சாதா ரூபா 8 முதல் 25 வரை. அதேமாதிரி உடலில் ஜரிகை வேலைகள் ரூபா 4 முதல் 55 வரை.

சவுக்கங்கள்:—2½ முழம் நீளம் 2½ அகலம் சுற்றி ஜரிகை மூலையில் மாங்காய் ரூபா 6-8-0 முதல் 15 வரை. அதேமாதிரி உடலில் பூக்கள் போட்டது. ரூபா 9-முதல் 30-வரை.

வெண்பட்டு வேஷ்டிகள்:—6, 7, 8, 9-முழம் நீளம் 2½, 2¾, 3-முழம் அகலம். சுத்த வெண்பட்டு கோயமுத்தூர் வேஷ்டிமாதிரி சிகப்பு சன்ன கம்பி போட்டது. விலை ரூபா 8½ முதல் 20-வரை. அதேமாதிரி வேஷ்டிகள் சிகப்பு சன்ன கம்பிக்குப் பதிலாக ஜரிகையால் சன்னக் கம்பி போட்டது. ரூபா 12-முதல் 30-வரை.

ஷை சவுக்கங்கள் 2½ × 2½-முதல் சிகப்புக் கம்பிக் கரை போட்டது. ரூபா 5-முதல் 8-வரை. ஜரிகைக்கம்பி போட்டது ரூபா 9-முதல் 15-வரை. ஷை வெண்பட்டு வேஷ்டிகள் ருத்திராட்சக் கரை போட்டதும் அதே விலைக்குக் கிடைக்கும்.

சுத்தமான கம்பிளி போர்வைகள்:—6-முழம் நீளம் 3-அகலம் எல்லா நிறத்திலும் ரூபா 5-8 முதல் 8-வரை.

உருத்திராக்ஷங்கள்:—6 முகம் 33 உள்ள மாலை அணா 8 முதல் ரூபா 5 வரை; 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16-முகம் தனி மணிகள் ரூபா 5 முதல் ரூபா 25 வரை; 108-கொண்ட ஜெபமாலை அணா ஆறு முதல் ரூபா 5 வரை.

கயிரவர் காசிக் கயிறு:—1-ம் கெ. 100-க்கு ரூபா 3. 2-ம் கெ. ரூபா 2-8-0, 3-ம் கெ. ரூபா 2. ஷை சிறிது 6-அணா. அதிலும் சிறிது 4-அணா.

பெண் குழந்தைகள் விளையாடும் பித்தளை பாத்திரங்கள் செட்டு:—பித்தளை, வெங்கலத்தால் செய்பு, குடம், கரண்டி முதலிய 27-சாமான்கள் அடங்கியது. சிறிது ரூபா 2. பெரிது ரூபா 4. நயம் கஸ்தூரி:—தோலா -க்கு ரூபா 35.

Silk Pitamber Co., Benares City.
விலாசம்:—மானேஜர், பட்டு பீதாம்பரக் கம்பெனி, காசி.

இதைக் கவனியுங்கள்.

உலகமெங்குங்கியாதிபெற்றுக்கையாண்டுவரும்
மருந்துகளின் விபரம்.

1. கெர்ப்ப உற்பத்தி மூலிகை உப்பு.

இது கெர்ப்பஸ்தானத்தில் சதை வளர்தல், பாசி படர்தல், காலாகாலங்களில் மாதவிடாயாகாமற் சரீரம் பருத்தும் இளைத்தும் இருத்தல், பொறுக்க முடியாத வயிற்றுவலி முதலிய காரணங்களால் கெர்ப்பஉற்பத்தி இல்லாதிருப்போர்க்கு அந்நோய்களை மாற்றிக் கெர்ப்பம் தரிக்கச்செய்யுமென்பது திண்ணம்.

௧௪ நாள் மருந்தின் கிரயம் ரூபா ௧.

2. தாதுவிர்த்திக்குப் பஞ்சாமிர்த லேகியம்.

இது அமிர்தம்போன்ற லேகியத்தைப் பாவித்ததன்பின்பே இதன் குணம் வெளியாகும்.

௧௪ நாள் மருந்தின் கிரயம் ரூ. ௨, அணா ௮.

3 பிரமேக வியாதிக்குச் சந்தனச்சேந்தூரம்.

எவ்வித பிரமேகமும் இம்மருந்தை யருந்தினால் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்.

௧௪ நாள் மருந்தின் கிரயம் ரூபா ௨.

4. எவ்வித வாய்வுகளுக்குஞ் சண்டமாருதக் குளிகை.

சரீரத்தின்எந்தஇடத்திலும் ஓடிக்குத்தும்வாய்வுகளுக்கும் மறைந்தஎவ்விதவாய்வுகளுக்கும் இம்மருந்தே கண்கண்டபம். ஐந்துநிமிஷத்திற் குணமாகும்.

௪௮ மாத்திரை புட்டி ஒன்று ரூ. ௧, அணா ௮.

5. மேகசஞ்சீவிச் சூரணம்.

மேகநோ யுண்டாகியபின் காணப்படும் அரையாப்பு முதலிய சர்வரோகங்களையும் இம்மருந்து நீக்கிவிடும். ௨௨ நாள் மருந்து ரூ. ௨.

6. புளிப்பு மாதுளம்பழ லேகியம்.

அன்னத்துவேஷம், பித்தக்கிறுகிறுப்பு, ஜீரணக்குறைவு, மலக்கட்டு இவைகளுக்குக் கைகண்ட ஔடதம்.

௧௪ நாள் மருந்தின் கிரயம் ரூ. ௧, அணா ௮.

7. இளைப்புஇருமலுக்குச் சுவாசகாசச்சூரணம்

எவ்வித இளைப்பு இருமல்களையும் அகற்றும்.

௨௨ நாள் மருந்து ரூ. ௨.

8. மூலிகை ரத்தினத் தைலம்.

அபூர்வ மூலிகைகளாற் தயாரித்த சுகந்த பரிமளமுள்ளது. குணத்திற் சிறந்தது. மணத்திலுமிகுந்தது. ஒருமுறை அரைக்கால் ரூபாயெடை தைலத்தைத் தலைக்கிட்டுக்கொண்டால் அன்று முழுவதும் ஜில்ஜிலுப்புடனிருப்பதுமன்றி ஒரு வாரம் வரை பரிமளம் மாறாது. 8 அவுன்ஸ் டின் 1-க்கு ரூ. 1.

9. பரிமள பற்பொடி.

பல் கூச்சம், இரத்தம் வருதல், துர்நாற்றம் இவைகளை மாற்றிப் பல் கறுக்காமல் முத்துப்போலிருந்து நறுமணங்கமழச்செய்து பல்வலியையும் 2 நிமிஷத்தில் கேட்கும்.

டப்பி 1 க்கு ரூ. 0-4-0 டஜன் 0 க்கு ரூ. 2-12-0.

10. படர்மேக சங்காரி வெண்ணெய்.

மேகநோயால் தேகத்தில்விழும் எவ்வித படர்தாமரை படைகளையும் ௩ வேளையிற் குணமாக்கும்.

டப்பி ௧-க்கு அணா ௪. டஜன் ௧-க்கு ரூ. ௨, அ. ௮.

எவ்வித மருந்துகளும் உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

தவறுதீர்கள்! இதுசமயம்!! தவறுதீர்கள்!!!
உங்களுடைய அதிஷ்டத்தைப்
பரிக்ஷித்துப்பாருங்கள்.

(௧) ஜாதகத்தை அனுப்புங்கள். இல்லாவிடில் ஜனனவருஷம் மாசம் தேதி நாழிகை என்னும் இவைகளை அனுப்புங்கள். இல்லாவிடில் இது பார்த்தவுடன் இதனடியிற் குறித்துள்ளவைகளில் எந்தப்பாகம் வேண்டுமோ அந்தப்பாகம் வரைந்தனுப்பினால் இன்னின்ன காலத்தில் இன்ன வகைக்கும் இன்னவை கிட்டும் கிட்டாதெனவும் நடிதம் கிடைத்த நேரத்தைக் கொண்டு இன்னவிதமுடிவுபெறுமென்று சண்முகநாதன் திருவருளால் வரைந்தனுப்புவோம்.

(௨) ௧. ஆயுட்பாகம், ௨. எந்தவிதத்திலும் தனம்கிடைக்கும், ௩. கல்யாணம் சொந்தமா, ௪. களத்திரபாகம் எத்தனை, ௫. அது முன்னு பின்னு, ௬. புத்திரருண்டா, ௭. தனம் வைத்துப் போவேனு, ௮. மரணமாகுமிடம் சுயதேசமா, ௯. சொந்தவீடு கிடைக்குமா, ௧0. கடன் எப்போது நிவிர்த்தியாகும், ௧௧. விவகாரம் ஜெயமாகுமா, ௧௨. வினோதச்சரிதம் முடியுமா.

தனி ஒருபாகம் சார்ஜ் ரூ. ௧.
முழுத்தொகையும் அனுப்பவேண்டும்.
௧௨ பாகம் சார்ஜ் ரூ. ௫.

பாதிச்சார்ஜ் முற்பணமாக அனுப்புவோர்க்கு வி. பி. போஸ்டில் அனுப்புவோம்.

விபரந்தெரியவிரும்புவோர்விலாசம் எழுதினால் ஜோதிஷ, வைத்திய "கேட்லாக்" இனாமாக அனுப்புவோம்.

வீ. பீ. சார்ஜ் பிரத்தியேகம்.
K. V. கோவிந்தசாமிநாயுடு,
ஜோதிஷம்,வைத்தியம்,
மேலைச் சித்திரவீதி,
மதுரை.

☞ இவைகளுக்கு எழுதுவோர் இப்பத்திரிகையைக் குறிப்பிட்டுக் காட்டவும்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டநிருபச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவுபிடிக்கும் திரிகோணமலை 6-ம் நம்பர் காசுக்கடை வீதி முருகுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை நாகலிங்கம் இராசலிங்கம் சுப்பிரமணியம் என்பவர்களிடமும், சரவணமுத்து பரஞ்சோதிப்பிள்ளை அன் வேல்மயில்வாகனம் என்பவர்களிடமும் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டியனவாகிய நகைகளின் விபரம்:—

இல.	ஆண்டு மாசம் தேதி	ரூபா சதம்	அடைவு வைத்தவர் பெயர், ஊர்.		அடைவுப் பொருளின் விபரம்.
a 1110	1917 - 1 - 11	8 - 00	விசுவநாதர் கந்தையா	5-ம் நம்பர்	சரையில்லாத குவளைக்கடுக்கன் சோடு 1
a 1160	1 - 17	8 - 00	ஐயாமுத்து சபாரத்தினம்	6-ம் நம்பர்	பொன் கொப்புச்சிமிக்கி சோடு 1, காதுப்பூ சோடு 1
a 1216	1 - 24	10 - 00	வயிரவன் வீரகத்தி	உப்புவெளி	குவளைக்கடுக்கன் சோடு 1
a 1342	2 - 11	15 - 04	பொன்னையா சுவாமிநாதபிள்ளை	1-ம் நம்பர்	மயிர்மாட்டி சோடு1
a 1458	3 - 7	35 - 00	கோணாமலை பொன்னையா	மனைகாமம்	தாலிக்கொடி 1
a 1494	3 - 18	150 - 00	சித்திரவேலு இளையதம்பி	5-ம் நம்பர்	சிங்கமுகக்காப்பு சோடு 1
a 1682	5 - 12	22 - 00	உமறுகத்தார் செயினம்பு	கொட்டியாபுரம்	கொப்புச்சிமிக்கி சோடு 1, தாலித்தட்டுக் கோர்வை 1
a 1699	5 - 16	30 - 04	பொன்னையா சுவாமிநாதபிள்ளை	1-ம் நம்பர்	பத சவுக்குமணிக் கோர்வை 1.
a 1922	7 - 19	5 - 50	சின்னத்தம்பி சீனி	கொட்டியாபுரம்	சிறு சவுக்குமணி 22
b 7	8 - 5	8 - 00	குமாரு மகள் இலட்சுமிப்பிள்ளை	5-ம் நம்பர்	பதக்கம் 1
b 76	8 - 23	10 - 00	சீ. வீ. தாவிசிஞ்ஞோ	தென்னமரவடி	சரையில்லாத குவளைக்கடுக்கன் சோடு 1
b 110	9 - 6	6 - 00	பாவிலு பெண் வியாகுலம்	3-ம் நம்பர்	சிறுகொப்புச்சிமிக்கிசோடு1, பச்சைக்கல் முருகுசோடு1
b 153	9 - 24	6 - 00	சின்னத்தம்பி சீனி	கொட்டியாபுரம்	பூசாத்திரம் 1.
b 213	10 - 9	30 - 00	செட்டி வேலுப்பிள்ளை	மனைகாமம்	ஐந்துபட்டு மணிக்கோர்வை 1
b 263	10 - 29	10 - 00	சாத்திரேசு சுப்பிரமணியம்	தம்பலகாமம்	சிமிக்கி சோடு 1
b 329	11 - 17	20 - 00	தீ. வீ. தாவிசிஞ்ஞோ	தென்னமரவடி	குவளைக்கடுக்கன் சோடு 2
b 334	11 - 20	6 - 00	வேலு கணபதிப்பிள்ளை	1-ம் நம்பர்	பின் இல்லாத சவுக்குமணிக் கோர்வை 1
b 353	11 - 26	20 - 00	தம்பையா தனபாலசிங்கம்	3-ம் நம்பர்	சிலைப்புக்கடுக்கன் சோடு 1
b 366	11 - 27	30 - 04	கனகசபை கதிராமத்தம்பி	8-ம் நம்பர்	சிறு சிங்கமுகக்காப்புசோடு 1
b 367	11 - 28	160 - 00	பொன்னையாமுதலியார் சுவாமிநாதபிள்ளை	1-ம் ந	மணிக்கோர்வை 1, மணி 35, குண்டு இரண்டு விழுந்த பதக்கமுடன் பூரானட்டியல் 1, சரையில்லை
b 399	12 - 8	25 - 00	சுவாமி செபஸ்தியான்	கொட்டியாபுரம்	பொன் பூரானட்டியல் 1
b 446	12 - 21	35 - 00	அருணாசலம் பொன்னுத்துரை	2-ம் நம்பர்	சிறுபூரானட்டியல் 1 டிம்மியில்லை
b 454	12 - 23	8 - 04	சின்னவி ஆறுமுகம்	6-ம் நம்பர்	கூடு 2

(சரவணமுத்து பரஞ்சோதிப்பிள்ளை & வேல்மயில்வாகனம், 6-ம் நம்பர் காசுக்கடை திரிகோணமலை.)

இல.	ஆண்டு மாசம் தேதி	ரூபா சதம்	அடைவு வைத்தவர் பெயர், ஊர்.		அடைவுப் பொருளின் விபரம்.
a 87	1916 9 - 23	6 - 00	சந்தியா பெண் மதலேனாள்	10-ம் நம்பர்	வெள்ளிக் குறக்காப்புச்சோடி ஒன்று
a 192	12 - 16	7 - 00	சுவாமி பிலேந்திரம்	கொட்டியாபுரம்	வெள்ளிப் பாதசரம் சோடி 1 சரை இல்லை
a 706	1917 - 7 - 12	10 - 00	பிச்சை மாமுனுமரைக்காயர்	பெரியகிணியாய்	பூசாத்திரம் 1
a 721	7 - 22	25 - 00	சீனிமுகம்மது முகம்மதுமீராலெவ்வை	4-ம் நம்பர்	அலுக்குத்து 21 அட்சிலை விழுந்தது
8	8 - 8	120 - 04	வேலுப்பிள்ளை பொன்னையா	8-ம் நம்பர்	சிங்கமுகக்காப்பு சோடி 1 கொன்றையாலை 1
32	8 - 18	30 - 04	கோணாமலை தம்பு	7-ம் நம்பர்	பதக்கமுடன் பூரானட்டியல் 1
41	8 - 23	20 - 00	"	"	பதக்கம பிறையுடன் சவுக்கமணிக்கோர்வை 1
87	9 - 8	19 - 00	அந்தோனி சவரியல்	கொட்டியாபுரம்	முன்றுபட்டுமாலை 1 [பழுது
170	10 - 8	15 - 00	முகையதீன்பாவா காசீன்	பெரியகிணியாய்	உருண்டைமணிக்கோவை1 பின்கோர்க்கி இல்லை
296	11 - 29	8 - 00	விசுவநாதர் கந்தையா	5-ம் நம்பர்	சொருகுதோடு சோடி 1
300	11 - 30	20 - 00	ஐயம்பிள்ளை கதிராமன்	8-ம் நம்பர்	சங்கிலி 1 சரை இல்லை
382	12 - 25	20 - 04	கோணாமலை தம்பு	7-ம் நம்பர்	மயிர்மாட்டி சோடி 1 கல்விழுந்தது
434	1918 - 1 - 10	7 - 00	அசமதுலெவ்வை அப்துல்றகீம்	பெரியகிணியாய்	வெள்ளி அடுக்குக்காப்புச்சோடி 1
507	1 - 29	20 - 00	கிலேமான் மதார்சாய்பு	சந்தாய்	ஐந்துபட்டுமணிக்கோவை 1 பழுது
543	1 - 30	10 - 00	அசுமான் மஜூன்	பெரியகிணியாய்	உட்கட்டு 1

விற்பனவு:—1919-ம் ஆண்டு ஜுலாய்மீ 9-ந் தேதிக்குச் சரியான சித்தார்த்தி வருடம் ஆனிமாசம் 25-ந் தேதி புதன்கிழமை பத்துமணி யளவில் மேற்படி 6-ம் நம்பர் காசுக்கடைத் திண்ணையிலிருந்து மேற்கண்ட நகை பிரசித்தமாகப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விசுவநாதர் பொன்னையா விசுவநாதருடையார், (பட்டணவுடையார்) லெய்திஸ்மேஸ்தர்.

☞ Printed and published by S. T. M. P. Sithambaranatha Chettiar, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.